CPA

Centre for Policy Alternatives

විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

02 ஜூலை 2019

அன்புடைய பாராளுமன்ற உறுப்பினர்,

### மரண தண்டனை நிறைவேற்றுதலைத் தடுப்பதற்கு சட்டச் சீர்திருத்தங்களுக்கான தேவை

மரண தண்டனையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் நான்கு பேர்களினது தண்டனையின் நிறைவேற்றுதலுக்கான ஆணைகளைத் தான் கையெழுத்திட்டதாக ஜூன் 29, 2019 அன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா கூறியிருந்தார். அந்த நான்கு பேர்களினதும் அடையாளங்கள் தொடர்பாக எந்தத் தகவல்களும் பகிரங்கமாகத் தெரிவிக்கப்படவில்லை. 1976 இலிருந்து மரண தண்டனை இலங்கையில் அமுல்படுத்தப்படவில்லை என்பதுடன் 43 வருடங்களாக மரண தண்டனையின் நிறைவேற்றுதல் இடைநிறுத்தப்பட்டு தற்போதும் நடைமுறையிலுள்ளது.

2007 இலிருந்து, ஐ.நா பொதுச் சபை "மரண தண்டனையை இல்லாதொழிக்கும் நோக்கத்தில் அதன் நிறைவேற்றுதல் மீது ஓர் இடைநிறுத்துதலைக்" கொண்டு வருவதற்காக கோரும் ஏழு தீர்மானங்களை ஏற்றுக் கொண்டது. இதில் மிகவும் அண்மித்ததாக டிசம்பர், 2018 உட்பட, ஐந்து தீர்மானங்களுக்கு, இலங்கை ஆதரவாக வாக்களித்துள்ளது. ஆகையால், தண்டனை நிறைவேற்றுதலைத் திரும்பவும் அமுல்படுத்துவதானது, பல வருடங்களாக சர்வதேச அரங்கில் இலங்கையினால் எடுக்கப்பட்ட ஒரு நிலைப்பாட்டிற்கு எதிரானதாக அமைகிறது. அத்தோடு இது, பெரும்பாலான நாடுகள் அவற்றின் சூழ்நிலைகளுக்கமைய மரண தண்டனையை இல்லா தொழித்துள்ள ஒரு பின்னணியிலும் மற்றும் உலக ரீதியாக குறைந்தளவிலான மரண தண்டனை நிறைவேற்றுதல்களே மேற்கொள்ளப்படும் ஒரு நிலையிலும் அமைந்தாகவும் உள்ளது. எனவே, மரண தண்டனைக்கு மீண்டும் புத்துயிரளிப்பது, உலக மனித உரிமைகள் நடைமுறைப் போக்கிற்கு எதிரானது. மேலும், சிவில் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சமவாயத்தின் உறுப்புரை 6 (2) இன் கீழ், போதைப் பொருள் தொடர்பான குற்றங்கள் 'மிகவும் தீவிரமான குற்றங்கள்' எனக் கருதப்படுவதில்லை என்பது இப்பொழுது ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

நடைமுறை மட்டத்தில், மரண தண்டனை என்பது குற்றத்திற்கு ஒரு கட்டுப்படுத்துதலாக அமைகிறதென்பதைக் காண்பிப்பதற்கு ஒரு அத்தாட்சியும் இல்லை. அத்தோடு இலங்கை போன்ற நாடுகளில் காணப்படுகின்ற குற்றவிலக்களிப்பு, குற்றவியல் நீதித்துறையில் இருக்கும் ஊழல் மற்றும் பிரச்சினைகள் போன்றவற்றுடன் நீதியின் பிறழ்ச்சிக்கான ஒரு அதிக சாத்தியப்பாட்டுடன் ஓர் அப்பாவி நபர் குற்றவாளியாகக் காணப்படுவதற்கான சாத்தியத்தை அது அதிகம் கொண்டுள்ளதும் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும். நீங்கள் அறிந்துள்ளவாறே, மரண தண்டனையின் அமுல்படுத்துதல் மாற்றொணாத் தன்மையானது என்பதுடன் நீதி தவறும் ஒரு சந்தர்ப்பம் ஒரு கொடூர மற்றும் மனித நேயமற்ற கீழ்த்தரமான தண்டனை மற்றும் நிவர்த்தி செய்யமுடியாத தீங்கிற்கும் இட்டுச் செல்லும்.

இலங்கையில் இருக்கின்ற அனைத்துச் சட்டங்களிலிருந்தும் மரண தண்டனையை இல்லாதொழிப்பது உட்பட இலங்கையின் குற்றவியல் நீதி முறைமையில் தேவையான அவசர சட்டச் சீர்திருத்தங்களுக்கான ஒரு பின்னணியில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி) உங்களிற்கு இதனை எழுதுகிறது. நீதிப் பிறழ்ச்சி ஏற்படாதிருப்பதையும் மற்றும் ஒருவரின் வாழ்வையும் சாவையும் தீர்மானிக்கும் அதிகாரத்தை எந்தத் தனியொரு நபரும் கொண்டிருக்கவில்லை என்பதை அத்தகைய ஒரு முறை உறுதிப்படுத்தும். ஒருவரின வாழ்க்கையைப் பறித்தெடுப்பதற்கு இட்டுச்செல்லும் ஒரு ஈடுசெய்யமுடியாத மற்றும் அழிக்க முடியாத நடவடிக்கையைத் தடுப்பதற்கு இந்த முக்கியமான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு மக்களின் ஒரு பிரதிநிதி என்ற வகையில் உங்களை நாங்கள் கேட்டுக் கொள்ளுகிறோம். முறைமைகள் மற்றும் கட்டமைப்புச் சீர்திருத்தங்கள் என்பவற்றிலான தாமதங்கள் மீது கவனம் செலுத்தும் சீர்திருத்தங்களை அறிமுகப்படுத்துவது உட்பட, குற்றவியல் நீதிச் சீர்திருத்தங்களை முன்னெடுப்பதற்கான அவசரத் தேவைகளை ஆராய்வதற்கும் உங்களை நாங்கள் கேட்டுக் கொள்கிறோம். இந்த விடயங்களில் சில சட்ட விவகாரங்கள் (ஊழலுக்கெதிரானது) மற்றும் ஊடகங்கள் தொடர்பான துறைசார் பாராளுமன்றக் குழுவினாலும் மற்றும் அதைப் போன்ற ஏனைய முன்னெடுப்புகளினாலும் ஏற்கனவே ஆராயப்பட்டுள்ளன. மா.கொ.நி மேலதிக தகவல் ஏதேனும் தேவைப்படின் உதவுவதற்கு இயலுமென்பதுடன் இது தொடர்பில் உங்களுடன் இணைந்து செயலாற்றுவதற்கும் எதிர்பார்த்துள்ளோம்.

நன்றி



கலாநிதி. பாக்கியசோதி சரவணமுத்து – நிறைவேற்றுப் பணிப்பாளர்